## பள்ளிக் கல்வித்துறை - விழுப்புரம் மாவட்டம்

## தமிழ்த் திறனறித்தேர்வு (TTSE) - 2023-24 - மாதிரித் தேர்வு- 1

1."மன்னும் சிலம்பே மணிமேகலை வடிவே!, முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!" என்னும் அடிகளுடன் தொடர்புடையவர்.

அ. தேவநேயப் பாவாணர் ஆ. க.சச்சிதானந்தன்

இ. பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஈ. தமிழழகனார்

2. கீழ்க்காண்பவற்றுள் 'நல்ல' என்னும் அடைமொழி பெற்ற எட்டுத்தொகை நூல்.

அ. நற்றிணை ஆ. குறுந்தொகை

இ. ஐங்குறுநூறு ஈ. பதிற்றுப்பத்து

3. பொருத்தி விடை தேர்க.

1) தாள் - i) கீரை, வாழை முதலியவற்றின் அடியைக் குறிக்கும் சொல்

2) தண்டு - ii) நெல், கேழ்வரகு முதலியவற்றின் அடியைக் குறிக்கும் சொல்

3) கோல் - iii) குத்துச்செடி, புதர் முதலியவற்றின் அடியைக் குறிக்கும் சொல்

4) தூறு - iv) நெட்டி, மிளகாய்ச்செடி முதலியவற்றின் அடியைக் குறிக்கும் சொல்

அ. 1) –ii), 2) – i), 3) – iv, 4) –iii ஆ) 1) –ii), 2) – iii), 3) – iv, 4) –i

இ)1) –iii), 2) – i), 3) – ii, 4) –iv ஈ) 1) –iii), 2) – iv), 3) – i, 4) –ii

4. கூற்று – 1 : விழிகளை இழக்க நேரிட்டால் கூட தாய்த்தமிழினை இழந்துவிடக்கூடாது என்று எண்ணியவர் தேவநேயப் பாவாணர் ஆவார்.

கூற்று – 2 : உலகத் தமிழ்க்கழகத்தை நிறுவி அதன் தலைவராக இருந்தவர் தேவநேயப் பாவாணர் ஆவார்.

அ. கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ. கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

இ. கூற்று 1,2 இரண்டும் சரி ஈ. கூற்று 1,2 இரண்டும் தவறு

5. கூற்று: தமிழ் சொல்வளம் உடையது என்றும் தமிழ்நாடு பொருள் வளம் உடையது என்றும் பாவாணர் கூறுகிறார்.

காரணம் : தமிழ்நாட்டு நெல்லில் செந்நெல், வெண்ணெல், கார் நெல், சம்பா எனப் பலவகைகள் இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டு சம்பா முதலிய அறுபது உள் வகைகள் உள்ளன.

(அ) கூற்று சரி, காரணம் தவறு (ஆ) கூற்று தவறு, காரணம் சரி

(இ) கூற்று, காரணம் இரண்டும் சரி (ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவற

6. கீழ்க்காண்பவற்றுள் தேவநேயப் பாவாணருடன் தொடர்பில்லாதது.

அ. சொல்லாய்வுக்கட்டுரைகள் ஆ. செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலி

இ. உலகத் தமிழ்க்கழகம் ஈ. திருவள்ளுவர் தவச்சாலை

7. பின் வருவனவற்றுள் பொருந்தாத இணையைத் தெரிவு செய்க.

(அ) கிளை – கொம்பின் பிரிவு

(ஆ) கொப்பு – குச்சியின் பிரிவு

(இ) சினை – கிளையின் பிரிவு

(ஈ) போத்து – சினையின் பிரிவு

8. பின்வருவனவற்றுள் பொருந்தும் இணையைத் தெரிவு செய்க.

(அ) அரும்பு – பூ விரியத்தொடங்கும் நிலை

(ஆ) போது – பூவின் தோற்ற நிலை

(இ) வீ – மரஞ்செடியினின்று பூ கீழே விழுந்த நிலை

(ஈ) செம்மல் – பூவின் மலர்ந்த நிலை

9. வள்ளுவர் கூறும் சிறந்த அமைச்சருக்கு உரிய பண்புகளை நிரல்படுத்துக.

(அ) குடிகாத்தல், வன்கண் , கற்றறிதல், ஆள்வினை

(ஆ) குடிகாத்தல், கற்றறிதல், ஆள்வினை, வன்கண்

(இ) வன்கண், குடிகாத்தல், கற்றறிதல், ஆள்வினை

(ஈ) வன்கண், கற்றறிதல், ஆள்வினை, குடிகாத்தல்

10. சரியான வரிசையினைத் தெரிவு செய்க.

(அ) வருக என உரைத்தல், வியத்தல், நன்மொழி இனிது உரைத்தல், திருந்துற நோக்கல்,

(ஆ) வருக என உரைத்தல், திருந்துற நோக்கல், வியத்தல், நன்மொழி இனிது உரைத்தல்,

(இ) வியத்தல், திருந்துற நோக்கல், நன்மொழி இனிது உரைத்தல், வருக என உரைத்தல்

(ஈ) வியத்தல், நன்மொழி இனிது உரைத்தல், திருந்துற நோக்கல், வருக என உரைத்தல்

11. உலகிலேயே தமிழ் மொழிக்காக (ஒரு மொழிக்காக) மாநாடு நடத்திய முதல் நாடு

(அ) சிங்கப்பூர்

(ஆ) மலேசியா

(இ) தாய்லாந்து

(ஈ) இந்தியா

12. கீழ்க்காண்பவற்றுள் தமிழ்நாட்டில் அன்றி வேறெங்கும் விளையாத சிறுகூலம் அல்லாதது.

(அ) வரகு

(ஆ) காடைக்கண்ணி

(இ) குதிரைவாலி

(ஈ) சீரகச்சம்பா

13. கூற்று : நாட்டின் தனிப்பெரும் வளத்தினாலேயே, பண்டைத் தமிழ்மக்கள் தனிப்பெரும் நாகரிகத்தை உடையவர்களாக இருந்திருக்கின்றனர்.

காரணம் : ஒரு நாட்டு வளத்திற்குத் தக்கபடியே அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.

(அ) கூற்று சரி, காரணம் தவறு (ஆ) கூற்று தவறு, காரணம் சரி

(இ) கூற்று, காரணம் இரண்டும் சரி (ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

14. கூற்று 1 : போர்ச்சுகீசு நாட்டின் தலைநகர் லிசுபனில், 1554இல் கார்டிலா என்னும் நூல் முதன் முதலாகத் தமிழ்மொழியில்தான் மொழிபெயர்க்கப்பட்டது. இந்திய மொழிகளிலேயே மேலைநாட்டு எழுத்துருவான ரோமன் எழுத்துருவில் முதலில் அச்சேறியது தமிழ்தான்.

கூற்று 2 : இது ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு மலரில் உள்ள செய்தி

(அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு (ஆ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

(இ) கூற்று 1,2 இரண்டும் சரி (ஈ) கூற்று 1,2 இரண்டும் தவறு

15. தமிழழகனார் இயற்றிய சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கை.

(அ) பத்து (ஆ) பதினொன்று

(இ) பன்னிரண்டு (ஈ) பதின்மூன்று

16. சண்முகசுந்தரம் என்ற இயற்பெயர் கொண்டவர்.

(அ) பெருஞ்சித்திரனார் (ஆ) பாவாணர்

(இ) எழில்முதல்வன் (ஈ) தமிழழகனார்

17. சாகும் போதும் தமிழ் படித்துச் சாகவேண்டும் - என்றன் சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும் என்று பாடியவர்.

அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆ) க.சச்சிதானந்தன்

இ) பாரதியார் ஈ) நப்பூதனார்

18. பின்வருவனவற்றுள் பெருஞ்சித்திரனார் அவர்களின் படைப்பு அல்லாதது.

அ) நூறாசிரியம் ஆ) கனிச்சாறு

இ) எண்சுவை எண்பது ஈ) குருஞ்சிதிட்டு

19. தமிழுக்குக் கருவூலமாய் அமைந்த பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் படைப்பு.

அ) திருக்குறள் விளக்க உரை ஆ) திருக்குறள் மெய்ப்பொருள் உரை

இ) திருக்குறள் விளக்கம் ஈ) திருவருட்பா விளக்க உரை

20. குறுந்தொகை, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை ஆகிய நூல்களின் அடைமொழிகளின் முறையே...

அ) நல்ல, ஒத்த, ஓங்கு, கற்றறிந்தார் ஏத்தும்

ஆ)ஒத்த, நல்ல, ஓங்கு, கற்றறிந்தார் ஏத்தும்

இ) ஓங்கு, நல்ல, ஒத்த, கற்றறிந்தார் ஏத்தும்

ஈ) நல்ல, ஒத்த, கற்றறிந்தார் ஏத்தும்,ஓங்கு

21. விழிகளை இழக்க நேரிட்டால் கூட தாய்த்தமிழை இழந்துவிடக்கூடாது என்று எண்ணியவர்.

(அ) பாவாணர் (ஆ) பாவலரேறு பெருஞ்சித்திரனார்

(இ) இரா.இளங்குமரனார் (ஈ) க.சச்சிதானந்தன்

22. தமிழ்நாட்டில் விளைந்த சம்பாவில் உள்ள உள்வகைகளின் எண்ணிக்கை.

அ) 60 ஆ) 70 இ) 40 ஈ) 50

23. மெய்யெழுத்துகளுள் ஒற்று முழுவதும் அளபெடுக்காத இனம்.

(அ) வல்லினம் (ஆ) மெல்லினம்

(இ) இடையினம் (ஈ) ஆய்தம்

24. கீழ்க்காண்பவற்றுள் ஒற்று அளபெடுக்காத இடையின எழுத்துகள்.

(அ) ய்,ர் (ஆ) ய்,ழ் (இ) ர்,ழ் (ஈ) ர்,ல்

25. இவற்றுள் முதனிலைத் தொழிற்பெயரைத் தெரிவு செய்க.

அ) கெடுதல் ஆ) கெடு இ) கேடு ஈ) கெட்டு

26. செய்யுளில், பெயர்ச்சொல் எச்சச்சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது .

அ) இசைநிறை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை

இ) சொல்லிசை அளபெடை ஈ) ஒற்றளபெடை

27. நேற்று என்னைச் சந்தித்தவர் என் நண்பர். – இத்தொடரில் பயின்று வந்துள்ள ஒன்று.

(அ) வினைமுற்று (ஆ) வினையெச்சம்

(இ) தொழிற்பெயர் (ஈ) வினையாலணையும் பெயர்

28. தவறான இணையைத் தெரிவு செய்க.

(அ) நாம் ஏன் தமிழ் காக்க வேண்டும் – முனைவர் சேதுமணி மணியன்

(ஆ) தவறின்றித் தமிழ் எழுதுவோம் – மா. மன்னன்

(இ) உலகின் மிகச்சிறிய தவளை - ச. முகமது அலி

(ஈ) பச்சை நிழல் – உதயசங்கர்

29. தவறான இணையைத் தெரிவு செய்க.

(அ) வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில் ஆயுள் பெருக்கம் உண்டாம் – ஔவையார்

(ஆ) வண்டொடு புக்க மணவாய்த் தென்றல் – சிலம்பு

(இ) வளி மிகின் வலி இல்லை – பலப்பபடைச் சொக்கநாதப் புலவர்

(ஈ) நளிஇரு முந்நீர் நாவாய் ஓட்டி வளிதொழில் ஆண்ட உரவோன் மருக! – புறம்

30. தவறான இணையைத் தெரிவு செய்க.

(அ) கிழக்கு – குடக்கு

(ஆ) மேற்கு – கோடை

(இ) வடக்கு – வாடை

(ஈ) தெற்கு – தென்றல்

31. திருமூலர் இயற்றிய நூல்.

அ) திருமந்திரம் ஆ)திருவாசகம் இ) திருப்பாவை ஈ) சிலப்பதிக்காரம்

32. குளோரோ புளோரோ கார்பனின் ஒரு மூலக்கூறு...

(அ) ஆயிரம் ஓசோன் மூலக்கூறுகளைச் சிதைத்துவிடும்

(ஆ) பத்தாயிரம் ஓசோன் மூலக்கூறுகளைச் சிதைத்துவிடும்

(இ) ஒரு இலட்சம் ஓசோன் மூலக்கூறுகளைச் சிதைத்துவிடும்

(ஈ) பத்து இலட்சம் ஓசோன் மூலக்கூறுகளைச் சிதைத்துவிடும்

33. மேற்கிலிருந்து வீசும் காற்று .

அ) கொண்டல் ஆ)வாடை இ) தென்றல் ஈ) கோடை

34. ஒரு மனிதன் ஒரு மணித்துளிக்கு வெளியிடும் கார்பன்டை ஆக்சைடின் அளவு

அ) 10 முதல் 18 வரை ஆ) 11 முதல் 16 வரை

இ) 12 முதல் 18 வரை ஈ) 11 முதல் 18 வரை

35. உலககாற்று நாள்.

அ)ஜூன் 12 ஆ) ஜூன் 15 இ) ஜூலை 12 ஈ) ஜூலை 15

36. கீழ்க்காண்பவற்றுள் பாரதியாருடன் தொடர்பில்லாதது.

(அ) நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா

(ஆ) சிந்துக்குத் தந்தை

(இ) புரட்சிக்கவி

(ஈ) பாட்டுக்கொரு புலவன்

37. பின் வருவனவற்றுள் குழந்தைகளுக்கான நீதி அல்லாத நூல் பாரதியாரின் நூல்.

(அ) குயில் பாட்டு

(ஆ) கண்ணன் பாட்டு

(இ) பாப்பா பாட்டு

(ஈ) புதிய ஆத்திச்சூடி

38. கீழ்க்காண்பவற்றுள் பொருத்தமான இணையைத் தெரிவு செய்க.

(அ) நேமி - மலை

(ஆ) கோடு - சக்கரம்

(இ) சுவள் - தோள்

(ஈ) நறுவி - அகன்ற உலகம்

39. கீழ்க்காணும் முல்லைப்பாட்டு பற்றிய குறிப்புகளுள் தவறான குறிப்பினைத் தெரிவு செய்க.

(அ) 103 அடிகளைக் கொண்டது.

(ஆ) ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது

(இ) நப்பூதனார் பாடியது.

(ஈ) பத்துப்பாட்டில் அதிக அடிகளை உடைய நூல்

40. புதுதில்லியில் உள்ள மண்டலச் சிறப்பு வானிலை ஆய்வு மையம் பட்டியலிட்டுள்ள புயல்களுக்கான பெயர்களின் எண்ணிக்கை.

(அ) 54

(ஆ) 64

(இ) 74

(ஈ) 84

41. பாரதியார் இயற்றிய கண்ணன் பாட்டு, பாப்பா பாட்டு, புதிய ஆத்திச்சூடி முதலியவை ஒரு

அ) காவியங்கள் ஆ) கும்மிப்பாடல்கள்

இ) குழந்தைப் பாடல்கள் ஈ) தேசப்பக்தி பாடல்கள்

42. புதுக்கவிதை என்ற வடிவம் உருவாகக் காரணமாக அமைந்தது.

அ) மரபுக்கவிதை ஆ) ஹைக்கூக் கவிதை

இ) வசன கவிதை ஈ) யாப்புக்கவிதை

43. கீழ்க்காண்பவற்றுள் இடம்புரிப் புயல்களுடன் தொடர்பில்லாதது.

அ) அமெரிக்கா ஆ) ஜப்பான்

இ) சீனா ஈ) ஹவாய் தீவுகள்

44. காலங்கரந்த பெயரெச்சம் ----------

அ) வேற்றுமைத்தொகை ஆ) வினைத்தொகை

இ) உம்மைத்தொகை ஈ) பண்புத்தொகை

45. மலர்க்கை – இச்சொல்லில் வரும் 'மலர்' என்பது ----------.

(அ) உவமை (ஆ) உவமேயம்

(இ) உவம உருபு (ஈ) பொதுத்தன்மை

46. பொருந்தாத இணையைத் தெரிவு செய்க.

(அ) தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை – சிலப்பதிகாரம்

(ஆ)அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும் – நற்றிணை

(இ) காலின் ஏழடிப் பின் சென்று – சிறுபாணாற்றுப்படை

(ஈ) விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண மேன்மேலும் முகமலரும் மேலோர் போல – கலிங்கத்துப்பரணி

47. 'பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ' – தொடருடன் தொடர்புடையது.

(அ) குறுந்தொகை (ஆ) சிலப்பதிகாரம்

(இ) நற்றிணை (ஈ) புறநானூறு

48. கீழ்க்காண்பவற்றுள் அதிவீரராம பாண்டியன் இயற்றாத நூல்.

(அ) வெற்றிவேற்கை (ஆ) திருக்காவலூர்க் கலம்பகம்

(இ) நைடதம் (ஈ) லிங்கபுராணம்

49. பின்வருவனவற்றுள் பொருத்தமான இணையினைத் தெரிவு செய்க.

(அ) பாய்ச்சல் - கவனமாக

(ஆ) பதனம் - பாத்தி

(இ) மகுளி - மேல்கஞ்சி

(ஈ) அலுக்கம் - அழுத்தம்

50. முகம் கடுத்து இடுவாராயின் கப்பிய பசியினோடு கடும்பசி ஆகும் தானே என்று கூறும் நூல்.

அ) முல்லைப்பாட்டு ஆ) மதுரைக்காஞ்சி

இ) நெடுநல்வாடை ஈ) விவேகசிந்தாமணி

51. கீழ்க்காண்பவற்றுள் பொருத்தமான இணையினைத் தெரிவு செய்க.

(அ) செவ்விலக்கியம் - Epic literature

(ஆ) காப்பிய இலக்கியம் - Classical literature

(இ) நாட்டுப்புற இலக்கியம் - Modern literature

(ஈ) பண்டைய இலக்கியம் - Ancient literature

52. உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்

கல்லார் அறிவிலா தார் – இக்குறளில் பயின்று வரும் அதிகாரம்.

(அ) ஒழுக்கமுடைமை (ஆ) பெரியாரைத்துணைக்கோடல்

(இ) ஆள்வினை உடைமை (ஈ) கொடுங்கோன்மை

53. வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்

கோலொடு நின்றான் இரவு – இக்குறளில் பயின்று வருவது.

(அ) மோனை மட்டும் (ஆ) எதுகை மட்டும்

(இ) மோனை, எதுகை (ஈ) எதுகை, இயைபு

54. பண்என்னாம் பாடற் கியைபின்றேல் ; கண்என்னாம்

கண்ணோட்டம் இல்லாத கண் – இக்குறளில் பயின்று வரும் அணி.

(அ) உவமை அணி (ஆ) எடுத்துக்காட்டு உவமை அணி

(இ) ஏகதேச உருவக அணி (ஈ) உருவக அணி

55. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்

தாழா துஞற்று பவர். – இக்குறளில் வரும் சுட்டுச்சொல்.

(அ) ஊழையும் (ஆ) உப்பக்கம்

(இ) காண்பர் (ஈ) உஞற்றுபவர்

56. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய

கோடிஉண் டாயினும் இல் – இக்குறளில் பயின்று வரும் அளபெடை.

(அ) இன்னிசை (ஆ) சொல்லிசை

(இ) இசைநிறை (ஈ) ஒற்றளபெடை

57. நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்

நச்சு மரம்பழுத் தற்று – இக்குறளில் பயின்று வரும் அணி.

(அ) உவமை அணி (ஆ) எடுத்துக்காட்டு உவமை அணி

(இ) ஏகதேச உருவக அணி (ஈ) உருவக அணி

58. 'இயல்பான மொழிநடையை உருவாக்குதல்' என்னும் மென்பொருள் பயன்படுவது.

(அ) வங்கிகளில் (ஆ) இதழியலில்

(இ) கல்வி நிலையங்களில் (ஈ) இணைய வணிகத்தில்

59. சில நிமிடங்களில் இரண்டு கோடித் தரவுகளைஅலசி, நோயாளியின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.

(அ) பெப்பர் (ஆ) வேர்டுஸ்மித்

(இ) இலா (ஈ) வாட்சன்

60. கூற்று 1 : சீனாவில் ஐம்பதுக்கும் மேற்பட்ட மருத்துவமனைகள் இயந்திர மனிதர்களைப் பணிக்கு அமர்த்தியுள்ளன.

கூற்று 2 : சீன மொழியின் வெவ்வேறு வட்டார வழக்குகளையும்கூட அவை புரிந்துகொண்டு பதில் அளிக்கின்றன.

(அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு (ஆ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

(இ) கூற்று 1,2 இரண்டும் சரி (ஈ) கூற்று 1,2 இரண்டும் தவறு

61. மெய்நிகர் உதவியாளர் என்பது.

(அ)இயல்பான மொழிநடையை உருவாக்கும் மென்பொருள்

(ஆ) உரையாடு மென்பொருள்

(இ) இணைய வணிகத்தில் பயன்படும் மென்பொருள்

(ஈ) திறன்பேசியில் இயங்கும் உதவு மென்பொருள்

62. உரையாடு மென்பொருள் ஒரு வினாடிக்குப் பேசும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை.

(அ) 1000 (ஆ) 5000

(இ) 10000 (ஈ) 50000

63. ELA – என்பதன் விரிவாக்கம்.

அ)Electric Live Assistant ஆ) Electronic Live Assistant

இ) Eduction Live Assistant ஈ) Election Live Assistant

64. சீனா நாட்டில் உள்ள சூவன்செள துறைமுகத்தில் உள்ள சிவன் கோவிலில் சிற்பங்கள்.

(அ) சேரர்காலச் சிற்பங்கள் (ஆ) சோழர்காலச் சிற்பங்கள்

(இ) பல்லவர்காலச் சிற்பங்கள் (ஈ) பாண்டியர்காலச் சிற்பங்கள்

65. வித்துவக்கோடு என்னும் ஊர் அமைந்துள்ள மாநிலம்.

(அ) தமிழ்நாடு (ஆ)ஆந்திரம்

(இ) கேரளா (ஈ) கர்நாடகா

66. 'மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா' என்று குலசேகராழார் உய்யவந்த பெருமானை உருவகித்துப் பாடுவது.

(அ) அன்னையாக (ஆ) தந்தையாக

(இ) நண்பனாக (ஈ) குழந்தையாக

67. பெருமாள் திருமொழி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின்.

(அ) ஒன்றாம் திருமொழி (ஆ) இரண்டாம் திருமொழி

(இ) நான்காம் திருமொழி (ஈ) ஐந்தாம் திருமொழி

68. பொருந்தாத இணையைத் தெரிவு செய்க.

(அ) விசும்பு - வானம்

(ஆ) ஊழ் - யுகம்

(இ) தண்பெயல் - குளிர்ந்த மழை

(ஈ) பீடு - சிறப்பு

69. பொருந்தாத இணையைத் தெரிவு செய்க.

(அ) ஊழ்ஊழ் - அடுக்குத்தொடர்

(ஆ) வளர்வானம் - வினைத்தொகை

(இ) செந்தீ - பண்புத்தொகை

(ஈ) வாரா - எதிர்மறைப் பெயரெச்சம்

70. "அண்ட பகுதியின் உண்டைப் பிறக்கம்" என்னும் பாடல் அடிகள் இடம்பெற்றுள்ள நூல்.

அ) தேவாரம் ஆ) திருவாசகம்

இ) பரிபாடல் ஈ) பெருமாள் திருமொழி

71. எட்வின் ஹப்பிள் ஒரு.

அ) அமெரிக்கர் ஆ) ரஷ்யர்

இ) சீனர் ஈ) ஜப்பானியர்

72. சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அறிவியல் தொழில்நுட்ப வளாகத்தின் பெயர்.

(அ) பெரியார் அறிவியல் தொழில்நுட்ப வளாகம்

(ஆ) காமராசர் அறிவியல் தொழில்நுட்ப வளாகம்

(இ) அண்ணா அறிவியல் தொழில்நுட்ப வளாகம்

(ஈ) நேரு அறிவியல் தொழில்நுட்ப வளாகம்

73. கருந்துளைப் பற்றிய ஆய்வுகளைக் கோட்பாடுகளாக வெளியிட்டவர்.

அ) ஸ்டீபன் ஹாக்கிங் ஆ) ஐன்ஸ்டைன்

இ) கலீலியோ ஈ) ஜான் வீலர்

74. மாற்றத்திற்கு ஏற்பத் தகவமைத்துக் கொள்ளும் திறனே புத்திக் கூர்மை என்றவர்.

அ) ஸ்டீபன் ஹாக்கிங் ஆ) ஐன்ஸ்டைன்

இ) கலீலியோ ஈ) ஜான் வீலர்

75. கூற்று 1 : கருந்துளையில் செல்லும் எந்த ஒன்றும் தப்பித்து வெளியே வரமுடியாது.

கூற்று 2 : கருந்துளை உண்மையிலேயே கருப்பாகத்தான் இருக்கும்.

(அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு　　(ஆ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

(இ) கூற்று 1,2 இரண்டும் சரி　　(ஈ) கூற்று 1,2 இரண்டும் தவறு

76. கீழ்க்காண்பவற்றுள் ஸ்டீபன் ஹாக்கிங் பெற்ற விருதுகளுடன் தொடர்பில்லாது.

(அ) ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் விருது

(ஆ) உல்ஃப் விருது

(இ) காப்ளி பதக்கம்

(ஈ) நோபல் பரிசு

77. கூற்று 1 : ஸ்டீபன் ஹாக்கிங் எழுதிய நூல்களுள் 'காலத்தின் சுருக்கமான வரலாறு' என்ற நூல் 1988 இல் வெளிவந்தது.

கூற்று 2 : இது ஐம்பது மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

(அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு　　(ஆ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

(இ) கூற்று 1,2 இரண்டும் சரி　　(ஈ) கூற்று 1,2 இரண்டும் தவறு

78. திணை, பால் , இடம், வழுக்களின் வரிசைகள் முறையே..

(அ) 2,5,3,8　　(ஆ) 2,5,3,6

(இ) 2,5,3,9　　(ஈ) 2,5,3,7

79. 'கத்தும் குயிலோசை – சற்றே வந்து காதில் படவேணும்' – இத்தொடரில் உள்ள வழுவமைதி.

(அ) திணை　　(ஆ) பால்

(இ) மரபு　　(ஈ) கால

80. கீழ்க்காண்பவற்றுள் வடமொழிக் கதைகளைத் தழுவிப் படைக்கப்பட்ட தமிழ்க்காப்பியம் அல்லாதது.

(அ) பெருங்கதை　　(ஆ) சீவகசிந்தாமணி

(இ) கம்பராமாயணம்　　(ஈ) சிலப்பதிகாரம்

81. "உலக நாகரிக வளர்ச்சிக்கும் பொருளியல் மேம்பாட்டிற்கும் மொழிபெயர்ப்பும் ஒரு காரணமாகும்" என்று கூறியவர்.

அ) பாரதி　　ஆ) மு.கு. ஜகந்நாதர்

இ) கவிமணி　　ஈ) ம.போ.சி

82. கீதாஞ்சலி என்னும் தம் நூலை ஆங்கிலத்தில் மொழிபெயத்தப்பின் இரவீந்தரநாத் தாகூர் பெற்ற விருது.

அ) நோபல்　　ஆ) சாகித்திய அகாதமி

இ) பத்மபூஷன்　　ஈ) இந்திய மாமணி

83. 'மொகு சாஸ்டு' - என்னும் ஜப்பானிய சொல்லின் பொருள் .

அ) மறுக்கிறோம் ஆ) தண்டிக்கிறோம்

இ) பணிகிறோம் ஈ) விடைதர அவகாசம் வேண்டும்

84. இராகுல் சாங்கிருத்யாயன் 1942ஆம் ஆண்டு ஹஜிராபாக் மத்திய சிறையிலிருந்த போது இந்தி மொழியில் எழுதிய நூல்.

அ) கங்கையிலிருந்து குமரிவரை ஆ) மும்பையிலிருந்து தானேவரை

இ) வால்காவிலிருந்து கங்கைவரை ஈ) வால்காவிலிருந்து குமரிவரை

85. 'பயன் கலை' என்று என்று மொழிபெயர்ப்பைக் குறிப்பிடுவதற்குக் காரணம்.

அ) கருத்துப் பகிர்வுக்கு உதவுவதால் ஆ) மேடைப்பேச்சுக்கு உதவுவதால்

இ) மொழிவளர்ச்சிக்கு உதவுவதால் ஈ) புதிய இலக்கியம் உருவாக்குவதால்

86. பிரான்சு தேசிய நூற்கூடத்தில் இல்லாத தமிழ் இலக்கியம் பின்வருவனவற்றுள் எது?

அ) மாணிக்கவாசகர் பிள்ளைத்தமிழ் ஆ) சரளிப்புத்தகம்

இ) புதுச்சேரியம்மன் பிள்ளைத்தமிழ் ஈ) கவிராயன் கதை

87. கூற்று 1 : தேசிய உணர்வு ஊட்டுவதற்கும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் இந்திய அரசு மொழிபெயர்ப்பை ஒரு கருவியாகக் கொண்டது.

கூற்று 2 : இத்தகைய மொழிபெயர்ப்பு முயற்சிகள் சாகித்திய அகாதெமி, தேசிய புத்தக நிறுவனம், தென்னிந்தியப் புத்தக நிறுவனம் ஆகியவற்றின் மூலம் செய்யப்பட்டன.

(அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு (ஆ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

(இ) கூற்று 1,2 இரண்டும் சரி (ஈ) கூற்று 1,2 இரண்டும் தவறு

88. சதாவனம் என்னும் கலையில் சிறந்து விளங்கியவர்.

(அ) செய்குத்தம்பி பாவலர் (ஆ) பரஞ்சோதி முனிவர்

(இ) பாவாணர் (ஈ) மணவை முஸ்தபா

89. நட்பினன் என்னும் பொருள் தரும் சொல்.

(அ) கேள்வியினான் (ஆ) கேண்மையினான்

(இ) ஈகலான் (ஈ) ஏதிலான்

90. குப்பைக் கொட்டும் இடத்தில் ஒரு பள்ளி உருவாக்கிடக் காரணமாக இருந்தவர்.

(அ) மேரி மெக்லியோட் பெத்வின் (ஆ) கமலாலயன்

(இ) சாம் (ஈ) பேட்சி

91. கீழ்க்காண்பவற்றுள் கமலாலயனுடன் தொடர்பில்லாதது.

(அ) வயது வந்தோர் கல்வி திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர்

(ஆ) வெ. குணசேகரன் என்ற இயற்பெயர் கொண்டவர்.

(இ) குப்பைக் கொட்டும் இடத்தில் ஒரு பள்ளி உருவாக்கிடக் காரணமாக இருந்தவர்

(ஈ) மாபெரும் கல்வியாளரின் வாழ்க்கையை "உனக்குப் படிக்கத் தெரியாது' என்ற தலைப்பில் நூலாகப் படைத்தவர்.

92. "விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்

கற்றாரோடு ஏனை யவர்" – இக்குறளில் பயின்று வரும் பொருள்கோள்.

அ) ஆற்றுநீர் பொருள்கோள் ஆ) நேர் நிரல்நிறைப் பொருள்கோள்

இ) கொண்டுகூட்டு பொருள்கோள் ஈ) எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்

93. பின்வருவனவற்றுள் வெளிப்படை விடைகள்.

(அ) சுட்டு, மறை, நேர்

(ஆ) மறை, நேர், ஏவல்

(இ) உற்றது உரைத்தல், உருவது கூறல், இனமொழி

(ஈ) ஏவல், உற்றது உரைத்தல், உருவது கூறல்

94. பின்வருவனவற்றுள் குறிப்பு விடைகள்.

(அ) சுட்டு, மறை, நேர்

(ஆ) மறை, நேர், ஏவல்

(இ) உற்றது உரைத்தல், உருவது கூறல், இனமொழி

(ஈ) ஏவல், உற்றது உரைத்தல், உருவது கூறல்

95. "சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமை" என்று யார் யாரிடம் கூறியது?

அ) கபிலரிடம் குசேலப் பாண்டியன்

ஆ) இடைக்காடனாரிடம் குசேல பாண்டியன்

இ) இறைவனிடம் குசேல பாண்டியன்

ஈ) குசேல பாண்டியனிடம் இடைகாடனார்

96. ஐம்பாலில் அஃறிணைக்கு உரிய பால்கள் எவை?

அ) ஆண்பால், பெண்பால் ஆ) ஆண்பால், பெண்பால், பலர்பால்

இ) ஒன்றன்பால், பலவின்பால் ஈ) பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்

97 . 'மீளாத்துயர்' இத்தொடரில் உள்ள இலக்கணக் குறிப்பு.

அ) எதிர்மறைப் பெயரெச்சம் ஆ) நான்காம் வேற்றுமைத் தொகை

இ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஈ) பண்புத்தொகை

98. இலா என்ற செயற்கை நுண்ணறிவு மென்பொருளை உருவாக்கிய வங்கி.

அ) பாரத ஸ்டேட் வங்கி ஆ) இந்தியன் வங்கி

இ) இந்தியன் ஓவர் சீஸ் வங்கி ஈ) சென்ட்ரல் வங்கி

99. 'முகம் கடுத்து இடுவாராயின் கப்பிய பசியினோடு கடும்பசி ஆகும் தானே' என்று கூறும் நூல்.

அ) முல்லைப்பாட்டு ஆ)மதுரைக்காஞ்சி

இ)நெடுநல்வாடை ஈ) விவேகசிந்தாமணி

100. விருந்தே புதுமை' என்று கூறியவர்..

அ) இளங்கோவடிகள் ஆ)ஔவையார்

இ) தொல்காப்பியர் ஈ) அகத்தியர்